பல பொருட்களின்
காட்சிக் கலைக்கூடம்...
- மணிக்கூடுகள்
- நீரிறைக்கும் யந்திரங்கள்
- ஈஸ்டன் சைக்கிள்கள்
- பாதணிகள், பாத்திரங்கள்
- பாவனைப்பொருட்கள்
- விளையாட்டுச் சாமான்கள்

அனைத்தும் சகாய விலை
சி. சின்னத்துரை
அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன் 284

பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 20 ஆடி: 2 ஷஃபா: 11 இதழ்: 157
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 18-7-78

எழுத்துலகின் நண்பன்
பாக்கர் ...
பைலட் ...
ஊற்றுப்பேனு,
போல்பென் றீபில்கள்...
பெருமளவில் இறக்குமதி
செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படு
கின்றது. பல வண்ண நிறங்கள்.
விற்பனையில் முந்துங்கள்
சி. சின்னத்துரை அன் பிரதர்,
யாழ்ப்பாணம் – போன் 284

RECEIVED 1978 PERIODICALS DIVISION LIBRARY

## துரையப்பா கொலைவழக்கு கலாபதியும் விடுதலை

# ஏழு ஜூரர்களினதும் ஏகதீர்ப்பு!

[நமது கொழும்பு நிருபர் மாலி]

**முன்னாள் யாழ். மேயர் அல்பிரட் தங்கராஜா துரையப்பா கொலை வழக்கில், முதலாவது எதிரி பால சுப்பிரமணியம் கலாபதி நேற்று விடுதலை செய்யப்பட்டார்! ஏழு தமிழ்ப் பேசும் ஜூரர்கள் முன்னிலையில் நேற்றுடன் ஒன்பதாவது நாளாக நடைபெற்ற இவ்வழக்கில்; ஏழு ஜூரர்களும் ஏக மனதாக வழங்கிய தீர்ப்பைத் தொடர்ந்து எதிரியை நீதிபதி விடுதலை செய்தார்.**

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. ஜே. எப். ஏ. ஸோசா முன்னிலையில் இம்மாதம் மூன்றுந் திகதி ஆரம்பமான இவ்வழக்கில் 2-ம், 3-ம் 4-ம், 5 ம், எதிரிகளான வி. ஏ. கிருபாகரன், எஸ். லோகநாதன், வி. சிறிதரன், ரி.சந்ததியார் ஆகியோர் விசாரணை நடுவே கடந்த 12-ந் திகதி விடுதலையானது வாசகர்கள் தெரிந்ததே.

ஜூரர்களின் மந்திராலோசனையைத் தொடர்ந்து அளிக்கப்பட்ட தீர்ப்பிற்கிணங்க "உம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்கின்றேன்" என்று நீதிபதி நேற்று தீர்ப்பு வழங்கினர்.

முதல் எதிரி பா. கலாபதி நேற்று சந்தன நிறத்திலான காற்சட்டையும், 'ரோஸ்' நிற புஷ்ஷேர்ட்டும் அணிந்திருந்தார். இவ்வழக்கில் எதிரிகளாக சம்பந்தப்பட்டு, ஏற்கனவே விடுதலை செய்யப்பட்ட நான்கு பேரும் நேற்று நீதிமன்றத்துக்கு வந்திருந்தனர். சரியாக பகல் 2-20க்கு தீர்ப்பு வழங்கப்பட்டபோது, கலாபதியின் முகத்தில் இலேசான புன்னகையொன்று தவழ்ந்து மறைந்தது.

வழக்கில் வாதாடிய எல்லா சட்டத்தரணிகளுக்கும் அவர் கைலாகுகொடுத்து நன்றியும் மகிழ்ச்சியும் தெரிவித்துக் கொண்டார். பலர் கலாபதியை கட்டித்தழுவி மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டனர்.

## சட்டத்தரணி 'சிவா'வின் நேற்றைய தொகுப்புரை

(கொழும்பு)

துரையப்பா கொலைவழக்கின் முதலாவது எதிரிசார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி திரு. எம், சிவசிதம்பரம் தமது தொகுப்புரையை நேற்றுக்காலை முடித்துக் கொண்டார். நேற்றைய அவரது தொகுப்புரை சுமார் அரைமணிநேரம் வரை நீடித்தது. நேற்றைய அவரது தொகுப்புரையின் சில முக்கிய அம்சங்கள் வருமாறு:

"எதிரிகளை பொலிசார் படம்பிடித்துள்ளனர். அரசியல் பின்னணி இருந்தால் மட்டுமே, எதிரிகள்படம்பிடிக்கப்படுவார்கள் என்று முன்னாள் யாழ். பொலிஸ்அதிபர் திரு. ஆரியசிங்கா இங்கு சாட்சியமளிக்கையில் கூறியுள்ளார். ஆனால் எதிரிகளை எப்போது, ஏன் படம் பிடித்தனர் என்பதற்கு காரணம் காட்டப்படவில்லை.

"சாட்சிகளுக்கு இப்புகைப்படங்கள் காட்டப்படவில்லை என்றால், அரசு சட்டத்தரணி இதனை நிரூபித்திருக்கவேண்டும். எமது இந்த வாதம் நிரூபிக்கப்படவில்லை.

"மல்லாகம் நீதிமன்ற அடையாள அணிவகுப்பில் எதிரிகளை அடையாளம் காட்டுவதற்கு சாட்சி யோகநாதனுக்கு பத்துநிமிடநேரம் பிடித்துள்ளது. இதற்கு நிதானம் காரணமென்று அரச-சட்டத்தரணி விளக்கமளித்துள்ளார். இதனை ஏற்கமுடியுமா? பொலிசார் சொல்லிக்கொடுத்ததை - காட்டிக் கொடுத்ததை நிதானத்துக்குக் கொண்டு வரவே இத்தாமதம் ஏற்பட்டிருக்கிறது.

"அரசு தரப்பு சட்டத்தரணி கடைசியில் அரசியல் வாதியாகமாறி, "அரசியல் கருத்துக்கள் இக்கொலையில் இருக்கலாம்" என்றுகூறினர். உலகசரித்திரத்தில், எந்தநாட்டிலாவது ஜூரிசபையினர் நீதி தவறியதாக கேள்விப்பட்டதில்லை. "அரசியல் வேறுபாடுகள் இருந்தால் அது பற்றி யோசிக்காமல் தீர்ப்பு வழங்குங்கள்" என்று உங்களைப் பார்த்து அரச சட்டத்தரணி

(2-ம் பக்கம் பார்க்க)

புதிய டிசைன்களில்
இறக்குமதிசெய்யப்பட்ட
CITIZEN
கைக்கடிகாரங்கள் கிடைக்குமிடம்:
நா. சாம்பசிவம் அன் கோ.
T. P. 454. யாழ்ப்பாணம். 9843

## வானொலியில் வந்த செய்தி

(கொழும்பு)

துரையப்பா கொலை வழக்கு சம்பந்தமான தீர்ப்பு, நேற்றிரவு இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனத்தின் செய்தியிலும் இடம் பெற்றது.

நேற்றிரவு 9 மணிச்செய்தியில் சரியாக 9-06 நிமிடத்தில் கொலைவழக்கு தீர்ப்பு பற்றிய செய்தி அறிவிக்கப்பட்டது. பி. கலாபதி விடுதலையானுர் என்றும் ஏற்கனவே இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட நான்கு எதிரிகளும் விடுதலை செய்யப்பட்டனர் என்றும் வானொலிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

## அந்த நேரங்கள்....

(கொழும்பு)

துரையப்பா கொலைவழக்கு விசாரணை நடைபெற்ற கொழும்பு மேல்நீதிமன்றத்தின் வெளியே என்றுமில்லாத வகையில் மக்கள் நேற்று திரண்டிருந்தனர். சட்டத்தரணிகளும் அதிகமாகவே காணப்பட்டனர்.

நீதிமன்றம் வழக்கம்போல நேற்றுக்காலை கூடியது. எதிர்தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணி திரு. எம். சிவசிதம்பரம் தமது(தொடர்ச்சியான) தொகுப்புரையை முடித்துக் கொண்டதும் நீதிபதி திரு. ஜே. எப். ஏ. ஸோசா, ஜூரர்களுக்கான சட்டத்துணை வழிகாட்டுத் தொகுப்புரையை சரியாக காலை பத்து மணிக்கு ஆரம்பித்து, பகல் ஒரு மணி முப்பத்தைந்து நிமிட அளவில் முடித்துக் கொண்டார். இடையே காலை 11-15க்கு பதினைந்து நிமிடநேர தேநீர்இடைவேளை வழங்கப்பட்டது. பகல் 1-35 முதல் 2-15 வரை ஜூரர்கள் மந்திராலோசனை நடத்தினர். சரியாக 2-20க்கு தீர்ப்பு வழங்கப்பட்டது.

நீதிமன்றத்துக்கு திரு. செருபிம் திரு. மகேந்திரராஜா ஆகிய சட்டத்தரணிகளைத் தவிர வழக்கு சம்பந்தப்பட்ட எல்லா சட்டத்தரணிகளும் வந்திருந்தனர். யாழ் எம். பி. திரு வெ. யோகேஸ்வரனும் வந்திருந்தார்.

### சட்டத்தரணிகள்

1-ம் எதிரி சார்பில் சட்டத்தரணிகளான எம். சிவசிதம்பரம், எம். அண்டலூட், எஸ். ருத்திரமூர்த்தி, கே. துரைரத்தினம், எஸ். கனகமனேகரன் ஆகியோர் ஆஜரானர்கள்.

2-ம் எதிரிசார்பில் சட்டத்தரணிகளான ஜே. ஏ. பி. செருபிம், வி. ஏ. புள்ளைநாயகம், என். விஜயநாதன், எஸ். என். ராஜா, திருமதி சாந்தினி ஞானகரன், எஸ்.கனகமனேகரன் ஆகியோர் ஆஜரானர்கள்;

3-ம் எதிரி சார்பில் சட்டத்தரணிகளான ஏ. மகேந்திரராஜா, வி. என். நவரத்தினம், எஸ். வரதராசா, எஸ். மகேந்திரன், எஸ். கனகமனேகரன் ஆஜரானர்கள்.

4-ம் எதிரி சார்பில் சட்டத்தரணிகள் வி. என். நவரத்தினம், எஸ். வரதராசா ஆஜரானர்கள்.

5-ம் எதிரி சார்பில் சட்டத்தரணிகள் எம். சிற்றம்பலம், நீலன் திருச்செல்வம், எஸ். சி. சத்திரகாசன் ஆகியோர் ஆஜரானர்கள்.

5 எதிரிகளின் சட்டத்தரணிகளுக்கும் சட்டத்தரணி எஸ். சுமந்திரன் அனுசரணையாக ஆஜரானர்.

## கலாபதிக்கு தொடர்ந்து றிமாண்ட்

(கொழும்பு)

துரையப்பா கொலைவழக்கில் நேற்று விடுதலைசெய்யப்பட்ட பி. கலாபதி தொடர்ந்து றிமாண்டில் நேற்று வைக்கப்பட்டார்.

இன்ஸ்பெக்டர் பத்மநாதன் கொலை சம்பந்தமாக கைதுசெய்யப்பட்ட இவர் தொடர்ந்து றிமாண்டில்வைக்கப்பட்டார்.

துரையப்பா கொலைவழக்கில் விடுதலையான கலாபதியை, நீதிமன்றத்தில் வைத்து சிலநிமிடங்களில் சிறைக் காவலர்கள் பின்னர் அழைத்துச் சென்றனர்.

கலாபதி கைதுசெய்யப்பட்டதை ஆட்சேபித்து அவர்சார்பாக மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செயயப்பட்ட ஆட்கொணர்வு மனு மீதான விசாரணை எதிர்வரும் வெள்ளிக்கிழமை விசாரணை எடுத்துக்கொள்ளப்படும். (ம)

# அருள் செய்ய ஏன் தாமதம்?

கதிர்காம மலைமீது கவினோடு வாழ்கின்ற
கந்தனே! முருகையனே!!
எதுவந்த போதிலும் எந்துன்ப நினைவினை
இல்லாமற் செய்த குருவே!
கதி தந்து உன்மனக் கண்கொண்டு எம்மவர்க்
கருள்செய்ய ஏன் தாமதம்?
விதி செய்த துன்பத்தை விரைந்து நீ போக்கிடு
விண்ணவர்க் கதிபதியே!!

--- இணுவை. ந. சண்முகப்பிரபு

இலங்கைப் பல்கலைக்கழக

# மருத்துவ பீடங்களில் 176 தமிழ்மாணவர் அனுமதி

(கொழும்பு)

இலங்கைப் பல்கலைக் கழகத்தின் மூன்று மருத்துவபீடங்களிலும் இம்முறை 176 தமிழ் மாணவர்கள் அனுமதி பெறுவர்.

கொழும்பு மருத்துவபீடத்தில் சுமார் 70 தமிழ் மாணவர்களும், பேராதனை வளாக மருத்துவபீடத்தில் 36 மாணவர்களும் யாழ். வளாகத்தில் 70 மாணவர்களும் அனுமதிக்கப்படுகின்றனர்.

கொழும்பு மருத்துவபீட மாணவர்களுக்கான வகுப்புக்கள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

பேராதனை, யாழ். வளாக மருத்துவபீடங்கள் செப்டம்பர் மாதம் 6ம் திகதி ஆரம்பமாகும். இவ்வளாகங்களில் அனுமதிபெறும் மாணவர்களின் பெயர்கள் வெளியிடப்பட்டபோதிலும் அனுமதி விபரங்கள் இன்னும் மாணவர்களுக்கு அனுப்பிவைக்கப்படவில்லை என்றும் விரைவில் அனுமதிப்பத்திரங்கள் அனுப்பிவைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். வளாக விஞ்ஞானப் பிரிவுக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் பெயர்கள் அடுத்த வாரம் வெளிவரும். (இ)

# ஒன்றாக உயிர் நீத்த இணைபிரியாத் தோழியர்

## கன்னன் குடாவில் சோகச்சம்பவம்

(மட்டக்களப்பு)

வாழ்க்கையில் ஏற்பட்ட விரக்தி காரணமாக மனமுடைந்த சிநேகிதிகள் இருவர் ஒன்றாகக் கிணற்றில் குதித்துத் தற்கொலை செய்துகொண்டனர் நெஞ்சை உருக்கும் மேற்படி சம்பவம் கன்னன் குடாவில் நடைபெற்றது.

இவ்வாறு ஒன்றாகச்சேர்ந்து தமது உயிரைப் போக்கிக்கொண்டவர்கள் அதேஇடத்தைச் சேர்ந்த செ. மாதவி (17 வயது) க.சின்னப்பிள்ளை 17 வயது ஆகிய யுவதிகளாவார்கள்.

இவர்களின் மரணம் தொடர்பாகக் கன்னன்குடா சடுதி மரண விசாரணை அதிகாரி திரு. சி. கிருஷ்ணபிள்ளை விசாரணை நடாத்தினார் அப்போழுது தெரியவந்ததாவது மாதவி என்னும் யுவதி பெற்றாரை இழந்து தனிமையில் வசித்து வந்தாராம் இவர் தனக்கு வாழ்க்கையில் ஏற்பட்ட நிர்க்கதியினால் நீண்ட காலமாகமனமுடைந்திருந்தாராம்.

அயல்வீட்டு யுவதியான சின்னப்பிள்ளை என்பவரும் மேற்படி மாதவியும் இணைபிரியாத இளமைக்காலச் சிநேகிதிகளாம் மாதவிக்கு அவரது பெயரில் இருந்து வந்த காணித்துண்டொன்றை அவரது சகோதரன் விற்றதுடன் அதனால் பெற்ற பணத்தையும் கொடுக்கவில்லையாம். இதனால் விரக்தி அடைந்த இவர் வாழ்வதில்லை என அடிக்கடி கூறிவந்தாராம்.

இவரது சிநேகிதி சின்னப்பிள்ளையும் தனது பெற்றோருடன் ஏற்பட்ட குடும்பத்தகராறு காரணமாக மனமுடைந்திருந்தாராம். இவர்கள் இருவரையும் சம்பவதினம் இரவு திடீரெனல் காணவில்லையாம் இதனால் இவர்களைத் தேடிவிட்டு ஒக் கிணற்றில் தேடியபோது இருவரும் பிணமாக கண்டெடுக்கப்பட்டனராம்.

விசாரணை முடிவில் 'தற்கொலைகள்' எனத்தீர்ப்பு வழங்கப்பட்டது. (உ)

# "திருவாசகம் பக்திநிலைக்கு உயர்த்தும்"

(சங்கானை)

"ஆன்மாக்கள் சிவத்தை அடைய திருவாசகம் வழிப்படுத்தும் ஒருசிறந்த நூல். திருவாசகத்தைப் படிக்கும்போதும், கேட்கும்போதும் ஒருவனுடையஉள்ளம் ஆணவமலம் குன்றி பக்திநிலைக்கு அவனைத் தயார்படுத்துகிறது"

இவ்வாறு தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி ஆசிரியர் சைவப்புலவர் எஸ். செல்லத்துரை, பண்டத்தரிப்பு ஐயனார் கோவில் மணவாளக் கோலத் திருவிழாவில் "தென்னவன் பிரமராயன்" என்னும் தலைப்பில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

பண்டைத்தரிப்பு இந்துக் கல்லூரியினர் நடாத்திய இந்த விழாவில் கல்லூரி அதிபர் திரு. வே. நாகராஜா தலைமையில தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் கூறியதாவது:

பண்ணோடு திருவாசகத்தை படிக்கையில் பக்திபரவச நிலையில் உருவாகிறது. திருவாசகம் ஓர் தேன்சமுத்திரம், மணிவாசகர் மனிதகுலத்தின் உய்விற்காக அருளிய அமுதம். இதை நாம் அனைவரும் அள்ளிப்பருகி அவன் அருள்பெற எம்மை ஆக்கிக்கொள்ளவேண்டும் என்றார். (உ)

# ராஜினமா!

புதுடில்லி, ஜூலை 17

மகாராஷ்டிரமாநில அரசின் ராஜினமாவை முதன் மந்திரி திரு. வசந்திரா பட்டீல் இன்று கவர்னரிடம் சமர்ப்பித்தார்.

ராஜினமாவை ஏற்றுக்கொண்ட கவர்னர் திரு. சாதிக்அலி, மாற்று ஏற்பாடு செய்யும்வரை அரச பொறுப்பை வகிக்கும்படி திரு. வசந்திரா பட்டீலிடம் கேட்டுள்ளார். (இ)

# "ஈழத்துப் பண்ணிசை மணி"

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டையைச்சேர்ந்த பண்ணிசை ஆசிரியை திருமுறைச்செல்வி கண்மணியம்மா இராமலிங்கம் அண்மையில் காரைநகர் திக்கரை முருகமூர்த்தி கோவிலில் பக்கவாத்திய சகிதம் பன்னிருதிருமுறைக் கச்சேரியை நிகழ்த்தியபொழுது அன்னார் சென்ற ஆறு ஆண்டுகளாக ஆற்றிவரும் திருமுறைத்தொண்டினையும், திறனையும், சேவையையும் பாராட்டுமுகமாக அத்தேவஸ்தானம் அன்னாருக்கு "ஈழத்துப் பண்ணிசை மணி" என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.

இக்கச்சேரி அன்னார் ஆரம்பத்தில் யாழ். மாவட்டத்தில் சகல ஆலயங்களிலும் மற்றும் சைவஸ்தாபனங்களிலும் கலாசார வைபவங்களிலும் சைவ உலகுக்கு 63 சைவசமய நாயன்மார்களின் சமயத்தொண்டினை நினைவூட்டுமுகமாகநடாத்திவரும் பண்ணிசைக் கச்சேரிகளின் தொடரின் 41வது கச்சேரியாகும்,

செல்வி கண்மணியம்மா இராமலிங்கம் பண்ணிசைக் கச்சேரிகளை நடாத்துவதுடன் 1972ம் ஆண்டு தொடக்கம் வட்டுக்கோட்டையிலும் அராலியிலும் வாரந்தோறும் பண்ணிசை வகுப்புகளை நடாத்திக்கொண்டு வருகின்றார். அத்துடன் அன்னார் வட்டுக்கோட்டையில் பண்ணிசை வகுப்புடன் ஆத்திசூடி, கொன்றைவேந்தன். திருக்குறள் முதலிய நீதி நூல்களை பள்ளிக்கூட மாணவ, மாணவிகளின் நலன் கருதிக் கற்பித்தும் வந்துள்ளார்.

செல்வி கண்மணியம்மா இராமலிங்கம் சென்னை காஞ்சிபுரம் ஓதுவாமூர்த்தி திருமுறைமணி திரு. பி. ஏ. எஸ். இராசசேகரத்தின் மாணவியாவார். அன்னார் ஏற்கனவே அராலியிலுள்ள கரைப்பிட்டி விநாயகர் ஆலயத்தில் 'திருமுறைச் செல்வி' என்னும் பட்டத்தையும், சங்கரத்தையிலுள்ள பத்திரகாளிஅம்மன் ஆலயத்தில் பொற்றாலம் பரிசையும் பெற்றுக் கௌரவிக்கப்பட்டுள்ளாரென்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# படகுச் சேவை

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் படகுச் சேவையைச் சீராக்கும் நடவடிக்கைகளில், ஊர்காவற்றுறை நிறைவேற்றுப் பொறியியலாளருக்கு உதவி அளிக்க நெடுந்தீவு முன்னேற்றக்கழகம் முன்வந்துள்ளது.

நெடுந்தீவுக்கு புதிதாக ஒரு படகுச்சேவை ஆரம்பிக்கப்படும்போது இச்சேவைகளில் நெடுந்தீவு இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்கவேண்டும் என்று கழகம் கோரிக்கை விடுத்துள்ளது. (கெ)

# தமிழுக்கும் இடம்

(மட்டுநகர்)

மண்முனை மேற்கு உதவி அரசாங்க அதிபரின் உத்தியோக முத்திரையில் தமிழ் மொழியும் விரைவில் இடம் பெறும்.

இத்தகவலை மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. எம் அந்தோனிமுத்து மேற்படி பிரிவு கிராமாபிவிருத்தி சங்கங்களின் மூன்று நாள்க்கருத்தரங்கில் நடைபெற்ற கருத்துப் பரிமாறலின் போது தெரிவித்தார்.

மேற்படி உத்தியோக முத்திரை தொடர்ந்து தனிச்சிங்களத்திலேயே இருந்து வருவதாக மண்முனை மேற்கு கிராமாபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் நீதிஅமைச்சருக்கும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் புகார் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (உ)

# "ஒழுக்கம் பண்பு, காப்பதே மேம்பட்ட வாழ்வு"

--யாழ். மாஜிஸ்திரேட்

(சுழிபுரம்)

"ஒழுக்கம், பண்புகாத்து உறுதியோடு வாழ்வது தான் மிகவும் முக்கியம். விளையாட்டில் வெற்றி தோல்வி ஏற்படலாம். வெற்றி சந்தோஷத்தையும், தோல்வி துக்கத்தையும் கொடுக்கலாம். நாம் யாருக்கும் இடைஞ்சல் இல்லாத வகையில் எங்கள் வாழ்வை வழமாக்கிக்கொள்ள வேண்டும். இப்படியான ஒரு வாழ்வை அமைத்துக்கொள்ள விளையாட்டுக்கள் யாவருக்கும் பெரும் வாய்ப்பாகவுள்ளது"

இவ்வாறு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி வருடாந்த இல்லப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து பேசிய யாழ்ப்பான நீதவான் திரு. கே. வி. நவரத்தினம் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு.எஸ். அருணாசலம் இதற்கு தலைமை வகித்தார்.

திரு. நவரத்தினம் மேலும் பேசுகையில், "நாம் பாடசாலையில் கற்கும் கல்வி வாழ்வுக்கு நல்ல பயன் கொடுப்பதாக அமைய வேண்டும். தர்ம நெறியைக் காத்து ஒழுங்குடன் நற்பிரஜைகளாக வாழ்வது நம் ஒவ்வொருவரது கடமையாகும்."

வட்டுக்கோட்டைத் தொகுதி தேசியப்பேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு பேசுகையில் சென்ற ஏழு ஆண்டுகளாக எவ்வித உதவியும் பெற்றுக் கொள்ள முடியாமல் புறக்கணிக்கப்பட்டிருந்த இக்கல்லூரிக்கு வேண்டிய கட்டிடங்களை கட்டரூபா இரண்டு லட்சம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு முதல்தரமான அதிபர் நிரந்தரமாக சேவையாற்ற நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசின் திட்டத்திற்கமைய எனது தொகுதியில் ஒருமுதல் தரமான கல்லூரியாகத் திகழ வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி ச. நவரத்தினம் பரிசில்களை வழங்கினர். (உ)

# ஆகஸ்ட் இறுதியில் திரைப்பட விழா

## கலாசாரமன்றக் கூட்டத்தில் ஜி. ஏ. அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"மக்களது வாழ்வின் மேம்பாட்டுக்கு உணவுமட்டுமல்ல உள்ளத்தை வளர்க்கும் கலையும் கலாச்சாரமும்அத்தியாவசியமாகும். கலாச்சாரத்திலே விரும்பப்படும் கலாச்சாரமும், வெறுக்கப்படும் கலாச்சாரமும் உண்டு. நல்ல கலாச்சாரங்களை வளர்க்கும் பொருட்டே கலாச்சாரங்களை வளர்க்கும் பொருட்டே கலாச்சாரக் கழகங்கள் உருவாக்கப்படுகின்றன. இந்நோக்குடனேயே நான் இன்று யாழ். மாவட்ட கலாச்சாரக் கழகத்திற்கு புத்துயிர் ஊட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்."

இவ்வாறு யாழ். கச்சேரியில் மாவட்ட கலாச்சாரமன்றத்தின் அங்கத்தவர்கள் மத்தியில் பேசுகையில் யாழ். அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்ணன்டோ கூறினார்.

யாழ். மாவட்டத்தில் வரும் ஆகஸ்ட் மாதம் 25ம் திகதி தொடக்கம் 31ம் திகதி வரை ஒரு திரைப்பட விழா நடத்த முடிவு செய்துள்ளோம். பல மொழிப்படங்கள் இதில் திரையிடப்படும் என்றும் திரு. பெர்ணன்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் யாழ்ப்பாணத்தில் 11 தியேட்டர்களில் பலரகமான படங்கள் நடைபெறும்போது திரைப்படவிழா எதற்கு? என நீங்கள் கேட்கலாம். நாம் காட்டப்போகும் படங்கள் தரத்தில் உயர்ந்தவை, கலைப் பண்புகள், பொருந்தியவை, வாள் எடுத்துபோர் தொடுக்கும் வரண்ட படங்கள் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

யாழ். சாந்தி தியேட்டரில் அடுத்த மாதம் இறுதியில் இத்திரைப்படவிழாநடைபெறும்.

# திருடர் சாதுரியம்

(மட்டுவில்)

படுத்துறங்கும் பொழுது தலையணைக்குக் கீழ்ச் சாவியை வைத்துக்கொண்டு உறங்கினார்வீட்டுக்காரர். எப்படியோ திருடர் தலையணைக்கடியிலிருந்த சாவிக்கொத்தைத் திருடி, வீட்டினுள் இருந்த நகை பணம் உட்பட 15000 ரூபா பெறுமதியான பொருட்கள் திருடினர்.

மட்டுவிலில் இச் சம்பவம் நடை பெற்றது. இராயப்பு திருத்தேவராஜா என்பவர் வீட்டிலேயே இத்திருட்டு நடைபெற்றது.

சாவகச்சேரி பொலிசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறார்கள். (உ)

# நூல் அறிமுக விழா

(கொழும்பு)

அமுதன் எழுதிய "மாரீசம்' நூலை கொழும்பு வாழ் இலக்கிய ரசிகர்களுக்கு அறிமுகம் செய்யும் முகமாக இம் மாதம் 23ம் திகதி கொழும்பு விவேகானந்த சபை சிறிய மண்டபத்தில் விழா வொன்று நடைபெறவுள்ளது. இவ் விழாவில் திருவாளர்கள் வேம்பைஸ்ரீ முருகன், அ. சிவராஜா, கலாநிதி க. செ. நடராசாஉட்பட பலர் உரை நிகழ்த்துவார்கள். இவ்விழாவில் சிறப்பு நிகழ்ச்சியாக ஈழத்துத் திரைப்பட இசையமைப்பாளர் எம். எஸ். செல்வராசா குழுவினர் அளிக்கும் "நாத வாரிதி" மெல்லிசை நிகழ்ச்சியும் இடம் பெறும்.

இவ்விழாவைக் கொழும்பு வேல் வெளியீட்டக நண்பர் கழகம் ஏற்பாடு செய்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# புனித அன்னம்மாள் உற்சவம்

(உடுப்பிட்டி)

தலைவில்லு புனித அன்னம்மாள் ஆலய வருடாந்த ஆடித் திருவிழா 23ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. இவ் உற்சவம் 30 ம்திகதி நடைபெறும் கூட்டுப் பலிப் பூசையுடனும், திருச்சுரூப சுற்றுப் பிரகாரத்துடனும் நிறைவு பெறும். (உ)

# வேலை வங்கிப் படிவங்கள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறைத் தொகுதியில் வழங்கப்பட்ட ஆயிரம் வேலை வங்கிப் படிவங்களும் பூர்த்தியாக்கப்பட்டு வடமராட்சி வடக்கு, கிழக்கு உதவி அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டன. (உ)

ஈழநாடு
The Eelanaadu

## மாவட்ட அமைச்சர்களும் கூட்டணியும்

அடுத்த மாதத்திலிருந்து மாவட்ட அமைச்சர்கள் கட்டம் கட்டமாக நியமிக்கப்படுவார்கள் என்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன திருக்கோணமலையில் தெரிவித்திருக்கிறார்.

அரசாங்கக்கட்சி எம்.பி.க்களே மாவட்ட அமைச்சர்களாக நியமிக்கப்படுவார்கள்.

ஒரு மாவட்டத்தைச் சேர்ந்த எம். பி.க்கள் எவரும் தங்கள் சொந்த மாவட்டத்துக்கு அமைச்சராக நியமிக்கப்படமாட்டார்கள்

மாவட்ட அமைச்சருக்கு உதவியாக மாவட்ட அபிவிருத்திச் சபைகள் நியமிக்கப்படும். இந்தச் சபைகளில் அந்த மாவட்ட எம். பி.க்களும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதியால் நியமிக்கப் படுபவர்களும் அங்கம் வகிப்பார்கள்.

உணவு, விவசாயம், காணிப்பங்கீடு, குடியேற்றம், கூட்டுறவு, சிறு கைத்தொழில், நடுத்தரக் கைத்தொழில், கடற்றொழில், கிராம அபிவிருத்தி, வீடமைப்பு, கல்வி, சுகாதார சேவைகள், கலாச்சார விவகாரங்கள், சிறிய நீர்ப்பாசனம், சந்தைப்படுத்தல் முதலிய அம்சங்கள் அபிவிருத்திச் சபைகளின் பொறுப்பிலிருக்கும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தவரையில் மாவட்ட அமைச்சர் பதவியை ஏற்பதா இல்லையா என்பதுபற்றி இன்னமும் திட்டவட்டமாக அறிவிக்கவில்லை.

ஆளும்கட்சி எம். பிக்களுக்கே மாவட்ட அமைச்சர்பதவி வழங்கப்படுமாகையால் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இப்பதவிக்கு நியமிக்கப்படுவார்களென்றோ கூட்டணியினர் இதை ஏற்பார்களென்றோ எதிர்பார்க்க முடியாது.

ஆனாலும்கூட்டணி தனது தனித்துவத்தை இழக்காமல் ஆளும் கட்சியுடன் சேரலாமென்று அரசாங்க வட்டாரங்களில் கூறப்படுகின்றது.

மாவட்ட அமைச்சரின் கீழ் நியமிக்கப்படும் மாவட்ட அபிவிருத்திச் சபைகளில் எம். பிக்களும் உள்ளூராட்சிமன்றப் பிரதிநிதிகளும் அங்கம் வகிப்பார்களாதலால் மாவட்ட அமைச்சர் பதவியைக் கூட்டணியினர் ஏற்கவேண்டுமென்ற அவசியம் இல்லை.

ஆனாலும் தமிழ்ப்பகுதி மாவட்டங்களின் அபிவிருத்திக்கும், கல்வி, குடியேற்றம் போன்ற முக்கிய அம்சங்களுக்கும் மாவட்ட அபிவிருத்திச்சபைகளே பொறுப்பிலிருப்பதால் கூட்டணியினருக்கு நல்லதொரு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

தமிழ்ப்பகுதியின் அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டும் புதிய அரசியல் அமைப்பில் அளிக்கப்பட்டுள்ள வசதிகளைப் பயன்படுத்தவேண்டிய அவசியத்தைக் கருதியும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமது தனித்துவத்தை இழக்காமல் ஆளும்கட்சியுடன் இணைந்து மாவட்ட அமைச்சர் பதவிகளை ஏற்றுக்கொள்வதில் பாரதூரமான தவறு ஏதாவது நேர்ந்துவிடுமென்று சொல்வதற்கில்லை.

# "பொறுப்பாக இருந்த அதிகாரிகளுக்கே தெரியும்"

### குறுக்குவிசாரணையில் எஸ். பி. சண்முகம் பதில்

(கண்டி)

'ஊருகல, பன்சல தன்னை, கடுகண்ணாவப் பகுதிகளில் பொலிசார் எடுத்த நடவடிக்கைகள் கண்டி நகரில் ஏன்எடுக்கப்படவில்லை என கண்டி நகரில் வன்செயல்களை அடக்குவதற்குப் பொறுப்பாக இருந்த பொலிஸ் அதிகாரிகளுக்குத்தான் தெரியும்'

இவ்வாறு கண்டியில் நடைபெறும் சன்சோனி கமிஷன் விசாரணையில் கண்டி முன்னாள் பொலிஸ் அதிபரும், தற்போதைய நுவரெலிய பொலிஸ் அதிபருமான திரு. எம். சண்முகம், தமிழ் அகதிகள் புனரமைப்புக்கழகத்தின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு. மாணிக்கவாசகர் அண்டவூட்டினால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது சொன்னார்.

அவர் மேலும் கூறுகையில், 'பொலிஸ்நிலைய நடவடிக்கை அறையில் கடமையாற்றிக் கொண்டிருந்த எனக்கு இது பற்றி ஒன்றும் கூறமுடியாது' என்றார்.

சட்டத்தரணி லெஸ்லி பார்ட்லெட், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் ஆஜராகும் சட்டத்தரணி திரு. எஸ். ஆர். சங்கார ஆகியோரினாலும் திரு. சண்முகம் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

#### பொலிசார் தடுத்திருக்க முடியும்

குறுக்குவிசாரணையில் அவர் கூறியதாவது: 'கண்டிமாவட்டத்தில் 1977ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற இனக்கலவரங்களின்போது இடம்பெற்ற வன்செயல்களைப் பொலிசார் தடுத்துநிறுத்தியிருக்கமுடியும். ஆனால் பொலிசார் தகுந்தநடவடிக்கை எடுக்கவில்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன். முதல்நாள் ஊரடங்குச்சட்டம்அமுலிலிருந்தபோது வத்துகாமம் பொலிஸ்நிலையத்திற்கு முன்பாகவுள்ள பஸாரில் 54 கடைகள் கொள்ளையடிக்கப்பட்டுச் சேதப்படுத்தப்பட்டுள்ளன. 13 கடைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. தீக்கிரையாக்கப்பட்ட ஒரு கடையினுள் இருந்த இருவர் கருகி மாண்டனர்.

ஆகஸ்ட் 17ந் திகதி வதந்திகளைப் பரப்புவோர்மீது நடவடிக்கைஎடுக்குமாறு பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டார்.

#### 24 மணி நேரத்தில் இடமாற்றம்

1977ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் 24 மணித்தியாலங்களுக்கிடையில் நுவரெலியாவுக்கு இடமாற்றம் பெற்றேன். இந்த இடமாற்றம் தண்டனையுடன் அளிக்கப்பட்டதா அல்லது பதவியுயர்வுக்காக அளிக்கப்பட்டதா? என என்னால்கூறமுடியாதுஎன்றார்.

"வன்செயல் புரிகையில்' ஒரு

# சிங்களவர் தமிழ்பொலிசாரால் சுடப்பட்டிருந்தால்.....?"

(கண்டி)

'வன்செயல் சம்பவங்களில் ஈடுபட்டிருந்த ஒரு சிங்களவர் ஒரு தமிழ்ப் பொலிசாரால் சுடப்பட்டிருந்தால் நாட்டின் நாலா பகுதிகளிலும் நடைபெற்றுவந்த வன்செயல்கள் மேலும் மோசமான நிலையை அடையக்கூடும் என எண்ணினேன்.'

மேற்கண்டவாறு பொலிஸ் சுப்பிரீண்டன்ட் திரு. சண்முகம், இ. தொ. கா. சார்பில் ஆஜராகும் சிரேஷ்ட சட்டத்தரணி திரு. கே. என். சொக்ஸியின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

அவர் இதுபற்றி மேலும் குறிப்பிடுகையில், 'ஆகஸ்ட் 16ம் திகதிக்கும் 25ந் திகதிக்கும் இடையில்கண்டி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த தமிழ் பொலிசாரை பொலிஸ்நிலையக் கடமைகளில் மாத்திரம் தான் ஈடுபடுத்தினேன். மேற்படி எண்ணம் ஏற்பட்டதால் தான் இந்தநடவடிக்கை எடுத்தேன்' என்றார். (உ)

## ஏழு சிறியுடன் முடியட்டுமே

வாகன இலக்கத் தொடரில் 7 ஸ்ரீ முடிவடையப்போகிறது நிதானமாக சிந்திக்க எல்லோருக்கும் போதிய அவகாசம் தரப்பட்டது. இனியாவது தமிழ் இந்துக்களுக்கும் சிங்கள பௌத்தர்களுக்கும் புனிதமான இந்த ஸ்ரீயை அவமதிக்கும் இழிநிலைக்கு முற்றுப்புள்ளி வராதா? இது தார்மீக அரசு அல்லவா? களவு, கொலை, காமம், கசிட்பு யாவற்றுக்கும் பயன்படும் வாகனங்களில் சேறும் அசிங்கமும் பூசிக்கிடப்பதற்கா ஸ்ரீ? போக்கு வரத்து அமைச்சரும் ஆணையாளரும் கவனிப்பார்களா? இலக்கத்தொடரை உருவாக்க வேறுவழிகளா இல்லை?

இ- மகாதேவா
திருநெல்வேலி.

காந்திய வழி வெறும் போராட்டவழிதான் என்று கருதமுடியாது. காந்திஜி தமது விடுதலைப்போராட்டத்துக்கு நிர்மாணத் திட்டம் வகுத்து மக்களிடம் சுதேச மனப்பான்மையை வளர்த்து அபிவிருத்தியில் ஈடுபடச் செய்தாரென்பதை மறந்துவிடக்கூடாது.

## நல்லூர் முத்துக்குமரனுக்கு ஒரு முத்து மண்டபம்

-- திருமதி கு. மல்லிகாதேவி --

இம்முறை நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழாவுக்கு வரும் அடியார்களுக்கு ஓர் அற்புதக் காட்சி காத்திருக்கிறது. ஆண்டு தோறும் நல்லூர் அறங்காவலர் செய்து வரும் சீர்திருத்தங்களுச்கு சிகரம் வைத்தாற்போல், நல்லூர் முருகனின் மகாமண்டபம் புதுப்பித்து புதுமெருடன் ஒருமணி மண்டபமாக தற்போது திகழ்கின்றது. சென்ற வெள்ளிக்கிழமை சாயரட்சை பூசையின்போது வில்லுப்பந்தல் பாணியில் அமைக்கப்பெற்று சிவப்பு முகிலாப்புக்களாலும் பல வர்ண குளோவர், சரவிளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கும் இப்புது மண்டபத்தின் பின்னணியிலுள்ள தங்கமயமான வாயில்களூடாக ஆதிமூலத்தில் தங்க சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் வேல்பெருமானை தரிசிக்கும்போது திருக்கைலாயக் காட்சிகள் இப்படித்தானிருக்குமோவென்ற எண்ணம் எழுந்தது. தீப ஆராதனையின் போது மணிமண்டபம் மின்விளக்குகளால்ஒளியூட்டப்பட்டதும் ஜெகஜோதியாய் துலங்கிற்று. மண்டப அலங்கார மேல் வளைவுகளில் பல வேல்களும் கீழ் வளைவுகளில் வேல் மணிகளும் பிரகாசித்தன. எங்கு பார்த்தாலும் வேல்மயம்.

'வேலுண்டு வினையில்லை' என்ற உண்மையை பக்த கோடிகளுக்கு உணரவைக்கும் நன்னோக்குடன் மண்டபத்தில் செய்திருக்கும் வேல் அலங்காரம் போற்றத்தக்கது.

வீரவேல் அறவேல்
விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல், செவ்வேள்
திருக்கைவேல், கூர்
மார்பும் குன்றம்
துளைத்தவேல்

என்று வேலின் பெருமையை புரியவைக்கிறது இம்மண்டபம் இந்த அழகு மணி மண்டபத்தை உருவாக்கினதும் பழைய வசந்தமண்டபத்தில் தற்காலிகமாக வைத்திருந்த முத்துக்குமரனையும் தேவிமாரையும் சென்ற புதன் கிழமை இரவு எழுந்தருளிவித்து புதிய சருவறையில் வைத்து ஆராதனைகள் முடிவானதும் ஆலயச் சுற்றுடலில் மழை பெய்ததாம். என்னே முருகன் பெருமை.

நமது மனதை லயப்படுத்துவதற்கு உரிய இடம் ஆலயம். அடியார்கள் வசதியாக நின்று வணங்குவதற்கு கோயில் விஸ்தரிப்பும், நமது மனதை ஈர்த்து இறைவன் பால் செலுத்துவதற்கு ஆலய அலங்காரமும், பூஜாகிரமங்களும் மிக முக்கியம்.

### மணிவாக்கு

ஊக்கம் இல்லாத படி என்றும், எதுவும் நிகழ்ந்ததில்லை. --எமர்ஸன்.

வடபகுதிபஸ்களில் பெண்களுக்குத் தனிஆசனம் ஒதுக்கியது பற்றிய சர்ச்சை இன்னும் ஓயவில்லை. இதுபற்றி 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்த செய்திபற்றி திரு. இ. சங்கர் எழுதிய கடிதத்தை இங்கு தருகிறேன்.

'ஈழநாடு' 9-7-78 இதழ் முதற்பக்கத்தில் வெளியான செய்தி தொடர்பாக வட்டுக்கோட்டைத் தொகுதி பஸ்பிரயாணிகள் சங்கம் பின்வரும் விளக்கத்தைக் கொடுக்க விரும்புகின்றது. தயவுசெய்து இச் செய்திக்கும் அதே அளவு முக்கியத்துவம் கொடுத்து பிரசுரிக்கவும்.

"வடபிராந்திய பஸ்வண்டிகளில் பெண்களுக்கு தனியாசன வசதிகள் செய்யப்பட்டுள்ளன. வரவேற்கப்படவேண்டிய முயற்சி. ஆனால் இவ்வாசன ஒதுக்கீடு புத்திபூர்வமான முறையில் செயல்படுத்தப்படவில்லை என்பதனை வட்டுக்கோட்டைத் தொகுதிப் பஸ் பிரயாணிகள் சங்கம் மிகுந்த கவலையுடன் எடுத்துக் காட்ட விரும்புகின்றது.

பஸ்வண்டிகளில் ஓட்டுனருக்குப் பின்னால் உள்ள ஆசனம் மதகுருமாருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. புதிய திட்டத்தின் பிரகாரம் இடதுபக்க ஆசனங்கள் முழுவதும் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் மிகுதியாக உள்ள ஆசனங்கள் தினசரி பஸ் பிரயாணம் மேற்கொள்ளும் தொண்ணூற்று ஐந்து விகிதமான ஆண் பிரயாணிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது அல்லது விடப்பட்டுள்ளது. இது எத்தகைய தரப்படுத்தல் விகிதாசாரத்தின் கீழ்ப்பட்டது என்பது புரியவில்லை.

பெண்களுக்கு இடதுபக்க ஆசனங்கள் ஒதுக்கப்பட்ட பின்னர் பஸ்ஸில் ஏற்றப்படும் பிரயாணிகள் தொகையும் சுமார் இருபது வீதத்தால் குறைந்துள்ளது! இடதுபக்க முழு ஆசனங்களும் பெண்களுக்கு ஒதுக்கப்பட்ட பின்னர் நின்றுசெல்லும் பிரயாணிகள் பரந்து நெருங்கி நிற்பதற்கு வசதியின்றி வலதுபக்க ஆசனங்களுடன் சார்ந்து நிற்கின்றார்கள். பெண்கள் பிற்கதவால் பஸ் உள்ளே சென்று அமருவதற்கும், இறங்கவேண்டிய இடத்தில் அவர்கள் முன் சென்று இறங்குவதற்குமாக. இதனால் வழமையாக பஸ்ஸில் அனுமதிக்கப்படும் பிரயாணிகள் தொகை சுமார் இருபது வீதத்தால் குறைந்துள்ளது. இதனை இ. போ. ச. புள்ளி விபரம் எடுத்துக்காட்டும் என்று நம்புகின்றோம்.

இடதுபக்க முழு ஆசனங்களும் வடபகுதி பஸ்களில் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டிருப்பது சட்டபூர்வமானதும் அல்ல, இதற்கு நல்லதோர் உதாரணம் வருமாறு:-

1978-07-06 ம் திகதி பிற்பகல் 4-30 மணிக்கு யாழ். சச்சேரியில் இருந்து பருத்தித்துறைக்குப் புறப்படும் சேவை பஸ்ஸில் யாழ். வீரசிங்கம் மண்டபத்திற்குமுன்பாக, அரசாங்க ஊழியர் ஒருவர் பஸ்ஸில் ஏறி இடதுபக்க இருக்கையில் அமர்ந்தார். பஸ் மத்திய பஸ் நிலையத்தை அடைந்த பொழுது நடத்துநர் அப்பிரயாணியை இடதுபக்க இருக்கையில் இருந்து எழும்புமாறு வற்புறுத்தினார். சம்பந்தப்பட்ட பிரயாணி மறுத்துவிட்டார். பொலிஸார் அழைக்கப்பட்டனர். பிரயாணி யாழ். பொலிஸ் நிலையம்வரை சென்றார். பொலிஸ்நிலையத்திலிருந்த அதிகாரி சம்பந்தப்பட்ட பிரயாணிமீது நடவடிக்கை எடுக்க சட்டத்தில் இடமில்லை என்று கூறி விடுதலை செய்தார்.

பெண்களுக்கு தனியாக

(5-ம் பக்கம் பார்க்க)

ஹிந்திமொழி உபயோகம்:

நேரு சாஸ்திரி இந்திரா

# மொரார்ஜி தேசாயின் உறுதிமொழி மீறப்படுகிறது

## தென் மாநில மகாநாட்டில் கண்டனம்

சென்னை, ஜூலை, 17

'ஹிந்திமொழி உபயோகம் குறித்து முன்னாள் பிரதமர்களான அமரர்கள் ஜவஹர்லால்நேரு, லால்பகதூர்சாஸ்திரி, திருமதி இந்திரா காந்தி ஆகியோரும் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயும் அளித்த உறுதிமொழிகள் இப்போது மீறப்பட்டு வருகின்றன. இந்த உறுதிமொழிகளை நிறைவேற்ற அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.'

இவ்வாறு தென் இந்திய மாநில முதல் அமைச்சர்கள் மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

சென்னையில் நடைபெற்ற இம்மகாநாட்டில் தமிழ்நாடு, கேரளம், 'பாண்டிச்சேரி, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம் ஆகிய மாநில முதல்வர்கள் கலந்துகொண்டனர்.

1963ம் ஆண்டு இயற்றப்பட்ட ஆட்சி மொழிச்சட்டம் 67ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட திருத்தத்துடன் தொடர்ந்து அமுல்செய்யப்படவேண்டும் என்று அரசைக் கோருவது என்றும் இம்மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. (இ)

### மாணவர்கள் வெளியேறுகின்றனர்

பீக்கிங், ஜூலை, 17

சீனாவில் கல்விபெறும் அல்பேனிய மாணவர்கள் இப்போது தமது கல்வியைக் கைவிட்டுவிட்டு நாடு திரும்ப ஆரம்பித்துள்ளனர் என அறிவிக்கப்பட்டது.

சீனாவுக்கு எதிரான கொள்கைகளை அல்பேனியா கடைப்பிடித்து வருவதாக சீனா குற்றம் சாட்டியதை அடுத்து அல்பேனியாவுக்கு அளித்துவந்த உதவிகளை நிறுத்தியதைத் தொடர்ந்தே மாணவர்கள் இப்போது சீனாவிலிருந்து வெளியேறுகின்றனர். (இ)

## "கிராம வளர்ச்சிக்குரிய திட்டங்களை செயலாக்குக"

(மட்டக்களப்பு நிருபர்)

"படுவான்கரையின் முன்னேற்றத்தை பாதித்துவந்த முக்கிய காரணிகளுள் மட்டக்களப்பு வாவி பெரும் பங்கினை வகிக்கின்றது. இதனால் கல்வி பொருளாதாரம் போன்ற அத்தியாவசிய துறைகளில் இப்பகுதி வளர்ச்சியடைவது மிகவும் கஷ்டமாகவிருந்துவருகின்றது"

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு எம். அந்தோனிமுத்து மண்முனை மேற்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலக மண்டபத்தில் அப்பகுதிக் கிராம முன்னேற்றச் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு நடாத்தப்பட்ட மூன்றுவது நாள் கருத்தரங்கில் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சொர்ணவடிவேல் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கை பிரிவுக் கிராம முன்னேற்றச் சங்கங்களின் சமாஜமும், கிராமாபிவிருத்தி அலுவலரும் கூட்டாக ஒழுங்குசெய்திருந்தனர். இக்கருத்தரங்கில் மட்டக்களப்பு மாவட்ட சிராமாபிவிருத்தி அதிகாரி திரு. பா. வேலுப்பிள்ளை கிழக்கு மாநில கி. அ. பயிற்சிப் பொறுப்பாளர் திரு. நீ. க. யோசேப், தலைமை அலுவலக உதவிஅரசாங்க அதிபர் திரு. எஸ். தர்மகுலசிங்கம் திட்டமிடல் அத்தியட்சகர் திரு. கே. தர்மலிங்கம் ஆகியோருட்பட முக்கிய திணைக்களங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

திரு அந்தோனிமுத்து தமது சிறப்புரையில் கூறியதாவது: படுவான்கரைக் கிராமங்கள் மிகவும் வறிய-பின்தங்கியவையாகும், ஆகவே சாதாரண மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தக்கூடிய திட்டங்களை செயற்படுத்துதல்வேண்டும். 30 ஆண்டுகளாக இலங்கையில் இத்தகைய இயக்கம் இயங்கிவரினும் கிராமங்களின் தேவையை பூர்த்திசெய்யக்கூடியதிட்டங்களைத் தயாரித்து செயல்படுத்தாமையினால் எதுவிதமாற்றத்தையும் காணமுடியாமலிருக்கின்றது. படுவான்கரை கிராம முன்னேற்றச் சங்கங்கள் பொதுமக்களின் ஆதரவு பெறத்தக்க திட்டங்களை செயற்படுத்துவதன் மூலமே அபிவிருத்தியடையலாம்.

நாட்டின் முதுகெலும்பாக கிராமங்கள் அமைந்துள்ளன. இதனால் அரசாங்கம் இவ்வியக்கத்திற்கு சகல அதிகாரங்களையும். சலுகைகளையும் வழங்கியுள்ளதால்பூரணத்துவமான நட்வடிக்கைகளில் ஈடுபடல்வேண்டும்'' என்றார்.

கிராமாபிவிருத்தி அலுவலர் திரு. கே. சுப்பையாபிள்ளை நன்றி தெரிவித்துப் பேசினார். (உ)

எகிப்து -- இஸ்ரேல்

## பேச்சுக்கள் அந்தஸ்து ரீதியிலேயே நடைபெற வேண்டும்

### இஸ்ரேலிய அமைச்சரவை உத்தரவு

ஜெரூஸலம், ஜூலை, 17

மத்திய கிழக்கு விவகாரம் குறித்து எகிப்து -- இஸ்ரேல் பேச்சுவார்த்தைகள் பரஸ்பரம் அந்தஸ்து ரீதியிலேயே நடத்தப்படவேண்டும் என்று இஸ்ரேலிய அமைச்சரவை அரசுக்குப் பணித்துள்ளது.

அமைச்சர்களும், அரசாங்க அதிகாரிகளும் தமது தரத்துக்கு ஏற்றவர்களுடனேயே பேச்ச நடத்தவேண்டும் என்றும் அமைச்சரவை கூறியுள்ளது.

**வைஸ்மனுக்குத் தடை**

இதேவேளையில் எகிப்துடன் நேரடிப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் திரு வைஸ்மனுக்கும் இஸ்ரேலிய அமைச்சரவை தனடவிதித்துள்ளது.

**புராதன கோட்டையில் பேச்சுவார்த்தை**

இம்மாதம் லண்டனில் நடைபெறவுள்ள இஸ்ரேல்-எகிப்து பேச்சுவார்த்தை பாதுகாப்புக் காரணமாக தென்கிழக்கு லண்டனில் உள்ள புராதனக்கோட்டை ஒன்றில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (இ)

## "பதவிஉயர்வின் போது அடிப்படைத் தகைமை"

### ஆசிரியர் சங்கக்கிளை கோரிக்கை

(நெல்லியடி)

'பதவியுயர்வு வழங்கும் போது பல்வேறுதர ஆசிரியர்களின் அடிப்படைத் தகைமைகளுக்கு ஒரேவித புள்ளி வழங்குவதோடு சேவைமூப்பு, வரையறுக்கப்பட்ட திறமை என்பவற்றைக் கவனிக்கவேண்டும்.

இவ்வாறு கல்வி, பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்களைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று வடமராட்சி தமிழாசிரியர்சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சங்கத்தலைவர் திரு. ரி. கிருஷ்ணபிள்ளை தலைமையில் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேறியது.

மேற்படி கூட்டத்தில் புது வருட நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது. பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டார்கள்; தலைவர்: த. கிருஷ்ணபிள்ளை, உபதலைவர்கள்; மு. இராமகிருஷ்ணன், ந. ஜெயசீலன், செயலாளர்: எ. அம்பலவாணர், உபசெயலாளர்: க. முத்துவேல், பொருளாளர்; வை. கிருஷ்ணபிள்ளை.

5 நிர்வாகக்குழு அங்கத்தவர்களும் தெரிவுசெய்யப்பட்டார்கள். (உ)

## பிணை அனுமதி

(நிந்தவூர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பகுதியில் நடைபெற்ற கள்ளக் கடத்தல் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஐந்துபேர் அம்பாறை மாவட்ட நீதிபதி திரு. வருஷ விதான முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு தலா 25,000 ரூபா ரொக்கப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ)

## மகாராஷ்டிர காங். அரசு ராஜினமா செய்யமுடிவு

புதுடில்லி, ஜூலை 17

மகாராஷ்டிரத்தில் காங்கிரஸ் கூட்டரசை வாபஸ் பெற்றுக் கொள்வதென்று காங்கிரஸ் காரியக் கமிட்டி முடிவு செய்துள்ளது.

மகாராஷ்டிர நிலைகுறித்து காரியக்கமிட்டி நேற்று சுமார் 6 மணித்தியாலம்வரை ஆலோசனை நடத்தியது.

ஜனதாகட்சி மகாராஷ்டிரத்தில் அரசு அமைக்குமானுல் காங்கிரஸ் அதனுடன் கூட்டுச் சேரவோ, அதற்கு ஆதரவு அளிக்கவோகூடாது, என்றும் தீர்மானிக்கப்பட்டது.

காரியக்கமிட்டியின் முடிவு குறித்து மகாராஷ்டிர முதல்வர் திரு. வசந்திரா பட்டீல் கருத்துத் தெரிவிக்கையில், கட்சித் தலைமைப்பீடத்தின் முடிவை ஏற்றுக் கொள்வது தமது கடமை என்றும் இன்று தாம் தமது அரசின் ராஜினமாவை கவர்னர் ஜனுப் சாதிக் அலியிடம் சமர்ப்பிக்க உள்ளதாகவும் தெரிவித்தார். (இ)

## திருவிழாவுக்குச் சென்ற சமயம் வீடுபுகுந்து திருட்டு

(மாவிட்டபுரம்)

வீட்டுக்காரர் வீட்டைப் பூட்டிவிட்டு பூங்காவனத் திருவிழாவுக்குச் செல்வதை தருணம் பார்த்திருந்த திருடர்கள் அவ்வீட்டினுள் புகுந்து சுமார் 5000 ரூபா பெறுமதியான நகை, உடுபிடவை என்பவற்றைத் திருடிச்சென்றுவிட்டனராம்.

இச்சம்பவம் பன்னாலையில் இடம்பெற்றுள்ளது.

பன்னாலையைச் சேர்ந்த திரு. வி. தில்லைநாதன் என்பவர் அருகிலுள்ள ஆலயமொன்றில் நடந்த பூங்காவனத் திருவிழாவைப் பார்ப்பதற்காக தமது குடும்பத்தினருடன் சென்ற சமயம் தருணம்பார்த்திருந்த திருடர்கள் வீட்டின் பின்புறத்தினால் சென்று இரும்பு வலைகளைப் பிரித்து வீட்டினுள் இறங்கி சுமார் 5000 ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலி உடுபிடவைகள் என்பவற்றைக் களவாடிக்கொண்டு தலைமறைவாகிவிட்டார்களாம்.

இக்களவு இடம் பெற்ற போது மேற்படி வீட்டின் வெளிவிறாந்தையில் ஒருவர் படுத்திருந்தபோதும் வெகு சாதுரியமாக ஓசைப்படாமல் அவர்கள் தமது கைவரிசையைக்காட்டினராம்.

காங்கேசன்துறை பொலிசைச் சேர்ந்த சார்ஜன்ட் திரு. தியாகராசா இதுகுறித்து விசாரணையிலீடுபட்டு மேற்படி திருட்டுப்போன வீட்டில் இருந்த வெற்றிலைப் பெட்டி ஒன்றில்திருடர்களதுகையடையாளம் இருக்கலாம் எனக் கருதி அதனை கையடையாள நிபுணர்களின் பரிசோதனைக்குட்படுத்தி தொடர்ந்து விசாரணையிலீடுபட்டுள்ளார்.

இதற்கு சில தினங்களுக்கு முன் இதேபகுதியில் வீடொன்றினுள் புகுந்து திருடர்கள் தமது கைவரிசையைக்காட்ட முயன்ற சமயம் வீட்டுக்காரர் வந்துவிடவே தப்பியோடிவிட்டதாகவும் கூறப்படுகிறது. (உ)

## தரம் குறைந்த மா விநியோகம்

(பருத்தித்துறை)

வடமராட்சிப்பகுதியில் உள்ள பேக்கரிகளுக்கு தற்போது விநியோகிக்கப்பட்டு வரும் மா தரம் குறைவானதாக இருப்பதால் இப்பகுதியில் வாழும் மக்கள் நல்ல பாணைவாங்க முடியாத நிலையில் உள்ளனர் எனக்கூறப்படுகின்றது. (உ)

இந்திரா -- உத்தியோகபூர்வ

# காங்கிரஸ் இணைப்பு

## பேச்சுக்கள் தொடராது

### பொதுக்காரியதரிசி அறிவிப்பு

(புதுடில்லி)

இந்திரா காங்கிரசையும் உத்தியோகபூர்வ காங்கிரசையும் இணைப்பதற்காக நடைபெற்று வந்த பேச்சுவார்த்தைகளை மேலும் தொடரப்போவதில்லை என்று உத்தியோகபூர்வ காங்கிரஸ் பொதுக்காரியதரிசி திரு, கே. சி. பந்த் கூறியுள்ளார்.

காங்கிரஸின் தற்காலிக தலைவர் திரு. வை.பி. சவான் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் காங்கிரஸ் இணைப்பு குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி ஆராயப்பட்டது,

காங்கிரஸ் இணைப்புக்கு 3 வார காலக்கெடு விதிக்கப்பட்டிருந்தபோதிலும் காலக்கெடு முடிவடைந்தபின்னரும் பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்படவில்லை. எனவே இப்பேச்சுக்களை மேலும் தொடர்வதில் எதுவித பயனும் இல்லை என்றும் திரு. பந்த் கூறினார். (இ)

## திருமலைமாவட்ட கூட்டணிக்கிளை

(திருகோணமலை)

தமிழர்விடுதலைக்கூட்டணியின் திருகோணமலை மாவட்டக்கிளைக்கூட்டம் தேசியப் பேரவை உறுப்பினர் திரு. இரா. சம்பந்தன் இல்லத்தில் நடைபெற்றது. நிர்வாக உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. இரா. சம்பந்தன் (எம்.பி), உப-தலைவர் திரு. க. வேலாயுதம், செயலாளர் திரு. வீரசுப்பிரமணியம், உப. செயலாளர் திரு ந ஸ்ரீஸ்கந்தராஜா, பொருளாளர்: திரு. பேதியாகராஜா பற்றும் செயற்குழு உறுப்பினர்கள் பத்துபேர் தெரிவாகினர். (உ)

(உடுப்பிட்டி)

துன்னாலை தெற்கில் இரு கோஷ்டியினருக்கு இடையில் ஏற்பட்டு வந்த மோதல் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு ஏ. குணநாயகம், துன்னாலை தெற்கு கிராம சேவையாளர், திரு. செ. அ. ஞானச்சந்திரன் ஆகியோரின் முயற்சியினால் சமரசமாகத் தீர்த்து வைக்கப்பட்டது. (உ)

## விவசாயிகள் சங்கம்

(கிளிநொச்சி)

இலங்கையில் விவசாயிகளின் மதிப்பு பெரிதும் உயர்ந்துள்ளது. அரசாங்கமும் விவசாயிகளுக்கு வேண்டிய உதவிகளை அளித்துவருகின்றது. வடபகுதியில் விவசாயத்தில் அபிவிருத்தி பெற்ற ஒருபகுதியாக கிளிநொச்சிப் பகுதி விளங்குகின்றபோதிலும் இங்கு விவசாயிகள் பெருங்கஷ்டங்களை அனுபவித்துவருகின்றனர். இவர்களின் குறைகளைப் போக்க அரசு முன்வரவேண்டும்''

இவ்வாறு கரைச்சிப் பகுதி விவசாயிகளின் நலனை முன்னிட்டுப் புதிய விவசாயிகள் சங்கமொன்றை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப்பேசிய கிளிநொச்சி லோங்ஸ் நிறுவன அதிபர் வண பிதா ரீ. ஏ. ஜே. மதுரநாயகம் குறிப்பிட்டார். (உடு. நி.-உ)

**Rio** (Jaffna) Phone: 7607
Daily 4 Shows
2nd Glorious and Crowded Week
Peter Fonda,
DIAMOND MERCENARIES

**நாகம்ஸ்**
(சுன்னுகம்)
தினசரி 6-45, 10-00
எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா
அசோகன்
ராமன் தேடிய சீதை

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர். - லதா
நினைத்ததை முடிப்பவன்
(புதிய பிரதி - கலர்)

## நாடும் நடப்பும்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ஒதுக்கவேண்டும் அது பஸ் வண்டியின் இடதுபுறத்தில் உள்ளமுன்மூன்றுஅல்லது நாலு ஆசனங்களாக மட்டுமே இருக்கவேண்டும். இந்தமுறைஒற்றைக் கதவு பஸ் வண்டிக்கும் இரட்டைக் கதவு பஸ் வண்டிக்கும் சிறப்பான பொருத்தமான நியாயமான ஏற்பாடாக அமையும்.

● ● ●

தமிழ் எம். பி.க்கள் தங்களது ஜீப்புகளில் தமிழிலும் இலக்கம் எழுதியுள்ளனர். முன்பு கார்களிலும் தமிழில் இலக்கங்களையும் எழுத்துக்களையும் எழுதியிருந்தனர். ஆனல் சில எம். பி.க்கள் ''ஸ்ரீ'' என்று எழுதியிருக்கின்றனர். பண்டிதர் தமது காரிலும் ஜீப்பிலும் ''சிறி'' என்று எழுதியிருக்கிருர்.

-ஊர்சுற்றி

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-சௌகார்ஜானகி-சுந்தரராஜன்
நடித்த
பேரும் புகழும்

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்-ரஜனி-ஆலம்
சுதா-வை.விஜயா
நடித்த
மன்மத லீலை
(ஈஸ்ட்மன் கலர்)

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
நாகேஸ்வரராவ் — சாவித்திரி
மஞ்சள் மகிமை

**லிடோ** (யாழ்.நகர்)
போன்: 7692
சிவகுமார், அல்கா
மதனமாளிகை

**சாந்தி** யாழ். நகர் போன்: 7642
தினசரி 10-30, 2-30, 4-45, 7-00, 9-30,
Daily 5 Shows Suspense! Thriller!! Alfred Hitchcock's FOREIGN CORRESPONDENT
20-7-78 CARRY ON BEHIND Comedy

**REGAL** Jaffna
Daily at 4-45, 7- & 9-30 P. M. only.
Gregory Peck
DUEL IN THE SUN
(color - Action)

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - கே.ஆர்.விஜயா
விவசாயி
(புத்தம் புதிய பிரதி)

**ஸ்ரீதர்**
2-வது வெற்றி வாரம்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - லக்ஷ்மி - நாகேஷ் - மனோகர்
நடித்த கே. பாலசந்தரின்
நூற்றுக்கு நூறு
(புதிய பிரதி)

# செய்திச் சுருக்கம்

### உபத்திரவம் அளித்த உல்லாசம்

(கதிர்காமம்)

போதை வஸ்து உட்கொண்ட நிலையில் இருந்ததாக நான்கு வெளிநாட்டு உல்லாசப்பயணிகள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். பரிசோதனையில் அவர்களிடம் இருந்து 540 களஞ்சு கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டது.

### ''இனப்பிரச்னைக்கு இடமில்லை''

(கொழும்பு)

''நாட்டில் இனிமேல் இன, மொழிப் பிரச்னைகள் ஏற்பட இடம் வைக்கமாட்டோம்'' என்று நீர்ப்பாசன நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு. காமினி திஸ்நாயகா இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் கூறினர்.

### கிராம சுயராஜ்ய இயக்கம்

(அச்சுவேலி)

அகில இலங்கை காந்தி சேவாசங்கம் தேர்தல்தொகுதி தோறும் ஒரு கிராமத்தைத் தெரிவுசெய்து அங்கு கிராம சுயராஜ்ய இயக்கத்தை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளது. முன்னோடியாக மானிப்பாய்த் தொகுதியிலுள்ள சங்குவேலிக் கிராமத்தில் இவ்வியக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

### அரிசிக்குப் பதில் மாசி இறக்குமதி

(கொழும்பு)

இலங்கை தனது அரிசியை மாலைதீவுக்கும் பங்ளாதேஷுக்கும் ஏற்றுமதிசெய்து அதற்குப் பதிலாக மாலைதீவிலிருந்து மாசி, கருவாடு ஆகிய வற்றையும், பங்ளாதேஷிலிருந்து வேறு பல பொருள்களையும் இறக்குமதி செய்யலாம் என அறியப்படுகிறது.

## கன்னன்குடா காளியம்மை உற்சவம்

(மட்டக்களப்பு)

கன்னன்குடா மண்டபத்தடி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய வருடாந்த தீமிதிப்பு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இவ் வைபவத்தில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

உற்சவம் ஆரம்பமாகிய ஒரு வாரகாலம் தொடர்ந்து விசேட ஆராதனைகளும் கிராமிய கலாசார நிகழ்ச்சிகளும் சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம் பெற்றிருந்தன. (உ)

## மிருசுவில் குடியேற்றத்திட்டத்தின்

# குறைபாடுகளை நீக்க உடன் நடவடிக்கை

### அரசாங்க அதிபர் உறுதி

(மிருசுவில்)

''நாட்டின் பொருளாதாரத்தை வளம்படுத்த மிருசுவில் படித்த மகளிர் திட்டத்திலுள்ள பெண்களைப்போல் நாட்டுக்காக அயராது உழைக்க முன்வர வேண்டும். அவ்வாறு ஒவ்வொரு பெண்களும் ஈடுபட்டால் நாட்டின் பொருளாதாரம் வெகுவிரைவில் உன்னத நிலையை அடைந்துவிடும்.

இவ்வாறு மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்திட்டத்திற்கென அமைக்கப்பட்ட பிரதான வீதியை திறந்து வைத்துப் பேசிய யாழ்.அரசாங்க அதிபர் திரு. எம். ஈ, லயனல் பெர்னுன்டோ கூறினுர்.

இவ் வீதி திறப்புவிழா மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்திட்ட மண்டபத்தில் காணி உத்தியோகத்தர் திரு. குலநாயகம் தலைமையில் நடைபெற்றது.

திரு. பெர்னுன்டோ தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

''இந்த நாட்டில் பொருளாதார சுபிட்சத்தை ஏற்படுத்தும் பணியில் ஈடுபட்டு வரும் ஒவ்வொருவருக்கும் அவர்களின் பணி வெற்றிபெற நாமும் எமது அரசும் என்றூறன்றும் இயன்ற உதவியை செய்யத் தயாராக இருக்கிறது.

''இக்குடியேற்றத் திட்டத்தின் பழைய செயலாளர் திருமதி கந்தையா நாகம்மா இங்குள்ள குறைபாடுகளை மகஜர் மூலம் சமர்ப்பித்துள்ளார். இவைகளை நான் அரசுக்கு எடுத்து கூறி வேண்டிய ஒழுங்குகளை செய்து தருகின்றேன்''.

திருமதி கந்தையா நாகம்மா நன்றி தெரிவிக்கையில் 'குடியேற்றத் திட்டத்தில் வசிக்கும் பெண்கள் பிரயாணக் கஷ்டத்தால் அவதியுறுகின்றமையால் இப்புதியபாதையால் பஸ்சேவையை ஆரம்பிக்க அரசாங்க அதிபர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இங்கு வசிப்பவர்கள், இக்குடியேற்றத்திட்டத்தில் நிரந்தரமாக வசிப்பதற்கு அரசின் உதவியுடன் வீடுகளை அமைக்க உடனடி நடவடிக்கைளெடுக்க வேண்டுமென்றும்கேட்டுக் கொண்டார். (கெ-இ)

## ''நோய் அதிகரிப்பிற்கு

# சுகாதார அறிவு இன்மையே காரணம்''

(நெல்லியடி)

''அரசாங்க வைத்தியசாலைகளில் நோயாளிகள் அதிகரிப்பதற்கு காரணம் மக்களின் அறியாமையும் கவலையீனமுமே ஆகும்'' என்று யாழ். மாவட்ட சுகாதார போதனசிரியர் திரு. கே. குமாரசிங்கம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற சுகாதார விழாவின்போது பேசுகையில் குறிப்பிட்டார்.

பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி திரு. எம். வேலும்மயிலும் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. குமாரசிங்கம் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது: மக்களுக்கு அரசினர் வைத்தியசாலைகளில் சிகிச்சை அளித்துவருகின்ற போதிலும் நோய்கள் குறைந்ததாகவோ அன்றி நோயாளிகளின் அளவு குறைந்ததாகவோ தெரியவில்லை. இதற்கெல்லாம் முக்கிய காரணம் மக்களின்அறியாமையும் கவலையீனமும் தான்.

''நமது அரசாங்கங்களின் பெருமுயற்சி காரணமாகவே இறப்பு வீத வீழ்ச்சி ஏற்பட்டது. சிசுக்களின் இறப்பு வீதமும் குறிப்பிடத்தக்க அளவிற்கு பெருவீழ்ச்சி அடைந்தது. 1946ம் ஆண்டிற்குமுன் சிசுக்கள் 1000க்கு 146 பேர் இறந்துபோனுர்கள். 1946ம் ஆண்டிற்கு பின் நிலைமைமாறி 1000க்கு 28 ஆகக்குறைந்தது. யாழ். மாவட்டத்தில் இத்தொகை சற்று குறைவாகும். 1946க்கு முன் பிரசவகாலத்தின்போது தாய்மார்கள் 10000க்கு 48 ஆக இறந்து போனுர்கள். ஆனுல் இன்று நிலைமைமாறிவிட்டது. 1.5 ஆக இன்று பிரசவத்தாய்மார்களின் இறப்பு வந்துவிட்டது.

''மக்கள் பூரணமான சுகாதார அறிவைப்பெருதுவிட்டாலும் ஓரளவாவது சுகாதார அறிவைப் பெற்ருகவேண்டும். வாந்திபேதி, செங்கமாரி, வட்டப்புழு போன்ற நோயகளை சுகாதார அறிவிருந்தால் ஓரளவு தடுத்துக்கொள்ள முடியும்.

அரசாங்கம் மலசலகூடங்களை அமைக்க நிதியுதவியைக் கடனுக வழங்கிவருகின்ற போதும் மக்கள் அதனைப்பயன் படுத்தாதது வேதனைக்குரியதாகும் என்ருர்.

மேற்படி சுகாதாரவிழாவின் பொழுது உடுப்பிட்டி வட்டாரக்கல்வியதிகாரி திரு. வீ. சே. ஈஸ்வரபாதம், சமாதான நீதவான் திரு. ந. பாஸ்கரன் ஆகியோரும் உரையாற்றினுர்கள். பாடசாலை மாணவர்கள் கலந்துகொண்ட பட்டிமன்றமும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. இவ்விழாவிற்கான ஏற்பாடுகளைக் கவனித்து வந்த நெல்லியடிப் பகுதி சுகாதாரப் பரிசோதகர் திரு. எஸ். ருெபேட் நன்றியுரை நிகழ்த்தினுர். (உ)

# குடும்பத் தகராறு: பாடசாலை அதிபர் தற்கொலை

(மட்டக்களப்பு)

குடும்பத்தகராறு காரணமாக மனமுடைந்திருந்த பாடசாலை அதிபர் ஒருவர் மட்டக்களப்பு வாவியில் குதித்துத் தற்கொலை செய்துகொண்டார். இவ்வாறு மரணத்தை தழுவிக்கொண்டவர் பெரிய கல்லாறு இரண்டாம் குறிச்சியைச் சேர்ந்த க. கிருஷ்ணபிள்ளை (51 வயது) என்பவராவார்.

கண்டெடுக்கப்பட்ட மேற்படி அதிபரின் பிரேதம் பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு நகர திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. த. சிவநாதன் விசாரணை நடாத்தினர்.

அப்பொழுது சாட்சியங்கள் மூலம் கூறப்பட்டதாவது: காலஞ் சென்றவர் நாவிதன்வெளி விநாயகர் வித்தியாலயத்தின் அதிபராவார். பாடசாலை முடிவடைந்து வீட்டுக்கு மதுபோதையில் வருவாராம். இவருக்கு ஆஸ்மா நோயும் உண்டாம். மது போதையில் வரும்போதெல்லாம் வீட்டில் அடிக்கடி தகராறு ஏற்படுவதுண்டாம். இதன்காரணமாக காலஞ் சென்ற அதிபர் சமீபகாலமாக மனமுடைந்திருந்தாராம்.

விசாரணை முடிவில் தற்கொலை எனத்தீர்ப்பு வழங்கப்பட்டது. (உ)

# நீதிபதியின் $3\frac{1}{2}$ மணி நேர தொகுப்புரை

துரையப்பா கொலைவழக்கில் எதிரிகள்தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணி திரு. எம். சிவசிதம்பரம் நேற்றுக்காலை தமது தொகுப்புரையை முடித்துக்கொண்டதும், கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி திரு. ஜே. எப். ஏ. ஸோசா ஜூரி சபையினருக்கு தமது தொகுப்புரையை நிகழ்த்தத் தொடங்கினார். சுமார் மூன்றரை மணி நேரமாக நிகழ்த்தப்பட்ட இத் தொகுப்புரையில் நீதிபதி தெரிவித்ததாவது;

## நீதிபதி தொகுப்புரை

''ஜூரி சபையினரே;

இக் கொலைவழக்கில் எதிரிகள் மீது மொத்தமாக மூன்று குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இக் குற்றச்சாட்டுக்கள் பற்றி நீங்கள் மீண்டும் ஒருதடவை கவனத்திற்கொள்வது நல்லது. முதல் குற்றச்சாட்டு— ஐந்து எதிரிகளும் சேர்ந்து சதி செய்தது. இரண்டாவது— முதல் எதிரி மீதான கொலைக் குற்றச்சாட்டு. மூன்றாவது- முதல் எதிரிக்கு உடந்தையாக இருந்ததாக முதல்எதிரி தவிர்ந்த மற்றைய நால்வர் மீதான குற்றச்சாட்டு. இக்குற்றச்சாட்டுக்களில் ஏற்கனவே நான்கு எதிரிகளும்விடுதலை செய்யப்பட்டுள்ளனர். முதல் எதிரிமீதானஒரு குற்றச்சாட்டு பற்றி மட்டுமே இப்பொழுது நீங்கள் தீர்ப்பளிக்க வேண்டும்.

## துணிவுடன் தீர்ப்பளியுங்கள்

''இந்த வழக்கு பற்றி நாட்டில் பெருமளவில் விளம்பரம் செயயப்பட்டுள்ளது. இவ் வழக்கு பற்றி நீங்கள் பலவிதமாகக் கேள்விப்பட்டிருப்பீர்கள். பல வதந்திகள் உங்களை ஆட்கொண்டிருக்கும். நாட்டின் பத்திரிகைகளில் எல்லாம் பெரிய அளவில் செய்திகள் வெளிவந்திருக்கின்றன. இவற்றை எல்லாம் நீங்கள் உங்கள் மனதிலிருந்து ஒதுக்கிவிட வேண்டும். இந்த நீதி மன்றத்தில் நடந்தவற்றை மட்டும் மனதிற்கொள்ள வேண்டும். இந்த நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட சாட்சியங்கள், தெரிவிக்கப்பட்ட விபரங்கள், நிகழ்த்தப்பட்ட தொகுப்புரைகளை மனதில் வைத்து தீர்ப்பு வழங்குங்கள். வேறு எந்த விஷயத்திலும் கவனம் செலுத்தாதீர்கள். எதிரி குற்றவாளியா அல்லது சுற்றவாளியா என்பதை நன்ருகச் சிந்தித்து, துணிவுடன் தீர்ப்பை வழங்குங்கள்.

## ராஜரத்தினம் ஏன் இல்லை

''இக்கொலை வழக்கில்,அரசதரப்பில் பிரதி வழக்குத்தொடுநர் நிகழ்த்திய தொகுப்புரை பற்றி விளங்கியிருப்பீர்கள். அரசியல் கருத்துக்கள் இக்கொலையில் இருக்கலாமென்றும் பொதுநோக்கு பற்றியும் அரசசட்டத்தரணி எடுத்துக் கூறினர். சாட்சிய முரண்பாடுகள், பொலிசாரின் நடவடிக்கைகள் பற்றி எதிரிதரப்பு சட்டத்தரணி எடுத்துக்கூறினர்.

''இக்கொலையில் முதல்எதிரி மீது கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருக்கிறது. கொலையுண்டவருடன் சென்ற ஏனையமூவரும், கடைக்காரியும் முக்கிய சாட்சிகளாகக்கருதப்பட்டுள்ளனர். கொலையுண்ட திரு துரையப்பாவுடன் அவரது காரில் கூடச்சென்றவர்களில் திரு. ராஜரத்தினம் ஒருவர். அவர் ஒரு முக்கிய சாட்சி என்றும் அவர் ஏன் இங்கு சாட்சியாக அழைக்கப்படவில்லையென்றும் எதிரிதரப்புசட்டத்தரணிகூறியதை நீங்கள் கவனத்துக்கு எடுக்க வேண்டும். சாட்சியங்களின்படி, திரு. துரையப்பாவுடன கோவிலுக்குள் சென்றவர் திரு. ராஜரத்தினம். அவர் சாட்சியாக இங்கு அழைக்கப்படாதது; சில சந்தேகங்களை ஏற்படுத்தியதுடன் ஏற்படுத்தப்பட்ட சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ளவும் வழி செய்யவில்லை என்று எதிரி தரப்பு சட்டத்தரணி இங்கு தெரிவித்துள்ளார். அவரது சாட்சியம் இங்கு முக்கியமாகக் கருதப்பட்டது, அவர் இங்கு அழைக்கப்பட்டிருந்தால் முரண்பாடாகவே சாட்சியமளித்திருப்பார் என்று கருதப்பட்டது. இவர் சாட்சியமளித்திருந்தால், மற்றைய சாட்சியங்களுடன் ஒப்பிட்டுப்பார்க்க ஏதுவாக இருந்திருக்கும் என்று கருதப்பட்டது. ஏனைய சாட்சியங்களில் காணப்பட்ட முரண்பாட்டினுல்தான் அவர் இங்கு அழைக்கப்படவில்லை என்று எதிரிதரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது. இதனை நீங்கள் கவனத்திற்கொள்ளவேண்டும்.

## டாக்டர் சாட்சியம்

''சம்பவம் நடைபெற்ற இடம் ஒரு சமதரை. மேடு பள்ளங்கள் அங்கு காணப்படவில்லை. டாக்டர் இங்கு அளித்த சாட்சியத்தில்,கொலையுண்ட துரையப்பாவைவிட ஆறு அங்குலம் உயரமுடையவரேஅவரைச்சுட்டிருக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. இங்கு கார்ச் சாரதி சிவனு தமது சாட்சியத்தில், சூட்டுக்குப் பின்னர் ஐயா மல்லாந்து வீழ்ந்து கிடந்தார் என்று தெரிவித்தார். டாக்டர் அளித்த சாட்சியத்தில், துரையப்பா குப்புற விழுந்து கிடந்ததாகத் தெரிவித்துள்ளார். இந்த முரண்பாட்டை நீங்கள் கவனிக்க வேண்டும். 'துரையப்பாவின் பின்புறத்தில் ஒரு காயம் இருந்திருக்கிறது. ஐயாவை அவர்கள் கலைத்துச் சென்று சுட்டனர்' என்று கார்ச் சாரதி சாட்சியமளித்திருக்கின்ருர். அதே நேரத்தில், சாட்சி யோகநாதனுடன் மோதியதாகக் கூறவில்லை. பொலிஸாருக்கு அளித்த சாட்சியத்தில், இருவர் வந்தனர் என்றும், இருவர் துரையப்பாவை துரத்திச் சென்றதாகவும், ஒருவர் தம்மிடம் வந்து 'ஓடு...ஓடு...அல்லது சுடுவேன்' என்று பயமுறுத்தியதாகவும் கார்ச்சாரதி சிவனு தெரிவித்துள்ளார். இங்கு மூவர் தம்மிடம் வந்ததாகக் கூறியுள்ளார். ஆனல் சுட்டதாகவோ யார் சுட்டனர் என்ருே சிவனு இங்கு கூறவில்லை. மல்லாகம் நீதிமன்றத்தில் நடைபெற்ற அணிவகுப்பில் இரண்டாவது எதிரியை சிவனு அடையாளம் காட்டவில்லை. இங்குதான் அடையாளம் காட்டினுர். 75 ஜூலை 27-ம் திகதி பொலிஸாருக்கு சிவனு அளித்த வாக்குமூலத்திலும் பின்னரும், எதிரிகள் துரத்தியதாகக் கூறினரே தவிர, சுட்டதாகக்கூறவில்லை. சி. ஐ. டி. திரு. விக்னராஜா சிவனுவின் சாட்சியத்தை பிழையான முறையில் பகிர்ந்திருக்கின்ருர் என்று இங்கு எதிரிதரப்பில் குற்றம் சுமத்தப்பட்டது. அவர் இங்கு அழைக்கப்படாததினுல் எதிரி பாதிக்கப்படக்கூடாது.பொலிசாரின் தவறுதல்களுக்காக எதிரி பொறுப்பாகக்கூடாது.

## யோகநாதன் சாட்சியம்

''இங்கு சாட்சியமளித்த திரு. யோகநாதன், கொலையுண்ட துரையப்பாவுடன் காரில் சென்றவர். பொலிசாருக்கு இவர் அளித்த வாக்குமூலத்தில், எதிரி பின்புறமாக டந்து மோதியதாகத் தெரிவித்துள்ளார். இங்கு அளித்த சாட்சியத்தில், எதிரி நேருக்கு வந்ததாகவும், தம்முடன் மோதுண்டதாகவும் கூறி, எதிரிகளை கணப்பொழுதில் இங்கு அடையாளம் காட்டியுள்ளார். ஆனல், மல்லாகம் நீதிமன்றத்தில் நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் எதிரிகளை அடையாளம்காண அவருக்கு பத்துநிமிட நேரம் பிடித்துள்ளது. இது சந்தேகத்தைக் கிளப்புவதாக எதிரி தரப்பில் இங்குகூறப்பட்டதை நீங்கள் கவனத்திற் கொள்ள வேண்டும்.

''முன்னள் மல்லாகம் நீதிபதி திரு. எப். டி. ஜேசுரத்தினம், இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளையின் நடவடிக்கைகள் பற்றி இங்கு தெரிவித்ததையும் நீங்கள் கவனத்துக்கு எடுக்க வேண்டும். கிங்ஸ்ஹவுஸில் எதிரிகள் பக்கத்து அறைகளில் பொலிஸ்முகாமில் வைக்கப்பட்டிருந்தது பற்றியும், மல்லாகம் நீதிமன்றத்தில் அடையாளஅணிவகுப்பு நடைபெறுவதற்கு முன்னர் முதலாவது எதிரி சாட்சிகளுக்கு 'கிங்ஸ்ஹவுஸில்' அடையாளம் காட்டப்பட்டது குறித்தும் மல்லாகம் நீதிபதியிடம் 1வது எதிரி இது பற்றி ஆட்சேபம் கிளப்பியிருந்தது குறித்தும் இங்கு தெரிவிக்கப்பட்டதை நீங்கள் மனதிற்கொள்ள வேண்டும். கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டு பின்னர் விடுதலையானவர், அவசரகாலச் சட்டத்தின் கீழ் மீண்டும் கைதுசெய்யப்பட்ட விஷயத்தையும் நீங்கள் கவனிக்க வேண்டும்.

## ராஜசுந்தரம் விவகாரம்

''துரையப்பா கொலைசெய்யப்பட்ட செய்தியை திரு ராஜசுந்தரம் எப்படி அறிந்தார் என்று இங்கு எழுப்பப்பட்ட சந்தேகம் பற்றி நீங்கள் கவனிக்கவேண்டும். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின யாழ்ப்பாணக் கிளையில் உட்பூசல்கள் இருந்தது என்றும் திரு. ராஜசுந்தரம், திரு. குமாரசூரியரின் ஆள் என்றும் இங்கு தெரிவிக்கப்பட்டதையும் நினைவில் இருத்தல் வேண்டும். திரு. ராஜசுந்தரத்தின் நடவடிக்கைகள் பற்றி எதிரிதரப்பு சட்டத்தரணிகள் இங்கு சுட்டிக்காட்டியதை நீங்கள் கவனிக்கவேண்டும்.

## எதிரியின் — நடவடிக்கைபோல...

ஐயா சுடப்பட்டு கீழே விழுந்து கிடந்தார். அவரை எடுத்துச்செல்ல வாகனம் ஒன்றும் அங்கு இல்லை. அந்த நேரத்தில் 'வான்' ஒன்று வந்தது.அந்த 'வானை' ஓட்டிய சாரதி புதியவர். வழக்கமான சாரதி அல்ல' என்று கார்ச் சாரதி சிவனு இங்கு தெரிவித்தார். திரு. ராஜசுந்தரத்தின் நடவடிக்கை ஒரு எதிரியின் நடவடிக்கை போல் இருந்திருக்கிறது என்று எதிரி தரப்பில் கூறப்பட்டதை நீங்கள் கவனிக்க வேண்டும்.

## கைரேகை இல்லை

'துரையப்பாவின் கார் புதியது. இதில் சம்பந்தப்பட்டவர்கள் அவசரத்தில் வெளியேறியுள்ளனர். ஆனலும், சாரிலோ அல்லது இங்கு சாட்சியமளித்த கண்மணியின் கடையில் வாங்கப்பட்டதாக கூறப்பட்ட சோடாப் போத்தல்களிலோ கைரேகை அடையாளங்கள் இல்லை. கார் பாதுகாப்பில் இருந்திருக்கிறது என்பதையும் நீங்கள் கவனிக்கவேண்டும்.

## சாட்சிய முரண்பாடு

''இங்கு சாட்சியங்கள்மூலம் வெளியான தகவல்களையும், அரசுதரப்பில், எதிரிகள் தரப்பில் வழங்கப்பட்ட தொகுப்புரைகளையும் நீங்கள் கவனிக்க வேண்டும். சாட்சிய முரண்பாடுகள் நிறைய இங்கு காணப்பட்டன என்றும், முக்கிய சாட்சிகள் அழைக்கப்படவில்லையென்றும் குற்றம் சுமத்தப்பட்டது. இவற்றை மட்டும் இங்கு நடந்தவற்றை மட்டும் கருத்திற்கொண்டு நிதானமாகச் சிந்தித்து உங்கள் தீர்ப்பை வழங்குங்கள்'' என்று நீதிபதி தமது தொகுப்புரையில் குறிப்பிட்டார். (ம)

# பாகிஸ்தான் ராணுவ அரசின் அமைச்சரவைக் கூட்டம்

## முதற்தடவையாக நடைபெற்றது

இஸ்லாமாபாத், ஜூலை 17 பாகிஸ்தான் இராணுவ அரசின் முதலாவது மந்திரி சபைக் கூட்டம் இன்று நடைபெற்றது.

விரைவில் தேர்தலை நடத்துவது குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இராணுவத் தலைமை நிர்வாகி ஜெனரல் ஸியாவுல்ஹக் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பாகிஸ்தானின் உத்தேச தேசிய அரசுப் பேரவைக்கு 200 முஸ்லிம் உறுப்பினர்களையும் 8 முஸ்லிம் அல்லாத உறுப்பினர்களையும், 10 பெண்களையும் தெரிவு செய்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

## மல்லி தட்டுப்பாடு

(உடுப்பிட்டி)

கட்டைவேலி நெல்லியடிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சில கிளைகளிச் கொத்த மல்லிக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (உ)

## சட்டத்தரணி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூறியுள்ளார். இது உலகில் எங்குமே நிகழாதது. ஹிட்லர் காலத்திலசரி இந்திய சுதந்திர விடுதலைகாலத்தில்சரி; இப்படியாக எதுவும் நடைபெறவில்லை. ஹிட்லர் காலத்தில், ஜெர்மனியில் பாராளுமன்ற கட்டடத்துக்கு தீவைத்ததாக ஒருவர் மீது பொய்வழக்குத் தாக்கலானது. அக்கட்டத்தில் கூட, ஜூரி சபையினரைப் பார்த்து ஹிட்லர் எதுவும் கட்டாயப்படுத்தவில்லை. ஜூரி சபையினர் நீதியானவர்கள். மனச்சாட்சிக்குமாருக செயல் படமாட்டார்கள்''. (ம)

## காங்கேசனில் உரக் கப்பல்

(கொழும்பு)

7500 தொன் உரத்துடன் கொழும்பில் இருந்து காங்கேசன் துறை துறைமுகத்துக்கு உரக் கப்பலொன்று வந்துள்ளது.

உரப்பசளைக் கூட்டுத்தாபனம் இதனை இங்கு அனுப்பி வைத்துள்ளது. (உ)

## மின்தறி ஆலை

(உடுப்பிட்டி)

(உடுப்பிட்டிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மின்தறி ஆலை ஒன்றை நிறுவ நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. செக்கோஸ்லேவாக்கிய நாட்டின் நிறுவனம் ஒன்றே இம் மின்தறி ஆலையை நிறுவிக் கொடுக்க முன்வந்துள்ளது. (உ)

# தொழிற்சங்கங்களின் அடையாள வேலை நிறுத்த எதிரொலி:

## விடுமுறை தினமாக அரசு அறிவித்தது

(சென்னை)

தொழிற்சங்கங்கள் இன்று நடத்தும் ஒருநாள்அடையாள வேலைநிறுத்தம் காரணமாக, செங்கற்பட்டு மாவட்டத்துக்கும் சென்னைநகருக்கும்இன்று பொதுவிடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

அம்பத்தூரிலுள்ள சைக்கிள் தொழிற்சாலையை மீண்டும் திறக்கவேண்டும் என்று கோரி தொழிலாளர்கள் இந்த அடையாள வேலை நிறுத்தத்தில் இன்று குதிக்கின்றனர்.

இது சம்பந்தமாக அரசு விடுத்துள்ள குறிப்பொன்றில், தொழிற்சங்க கூட்டுக்குழுவின் இம்முடிவினுல் அரசு ஊழியர்களும் தொழிலாளர்களும் மற்றும் மாணவர்களும் தனியார் நிறுவன ஊழியர்களும் போக்குவரத்துப் பிரச்னையால் பாதிக்கப்படலாமென்று கருதி செங்கற்பட்டு மாவட்டத்துக்கும் சென்னைநகருக்கும் பொது விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது என்றும் அரசு ஊழியர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் இவ்விடுமுறை தினம் சம்பளத்துடன் கூடியதாக இருக்குமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஜூலை மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No: 49, Jaffna - Telegram: Ealanaadu-Telephone: 389 - Registered as a News paper in Sri Lanka